சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No. 9/2017

பெயர். திருமதி.தேவி நாள் 16.12.2024
த/பெ. ரவிச்சந்திரன்

**எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1. ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட முழு மருத்துவ பரிசோதனை அறிக்கை **எ.ம.சா.ஆ.1.** அங்கு நான் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான நோட்டுப் புத்தகம் **எ.ம.சா.ஆ.2**. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் ஆசிரியர் பட்டயப் பயிற்சி படித்துள்ளேன். கடந்த 28.9.2014 அன்று Faith மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.த.சா.ஆ.3 தான் அந்த மருத்துமவனையில் எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.3 ஐ நான் படித்து தெரிந்து கொண்டேன். அதில் HBS AG positive என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான விளக்கத்தை மருத்துவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அதற்காக என் முதுகெலும்பில் மருந்து ஏற்றினார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு ஏற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது. அந்த மருத்துவமனை செல்லும்போது என்னுடைய கணவர், அவரின் சகோதரி மற்றும் தாய் வந்தனர். மருத்துவர் அவர்களிடம் அந்த நோயைப் பற்றி கூறினார் என்றால் சரிதான். மருத்துவர் அந்த நோய் குறித்து மேற்கொண்டு சிகிச்சை எடுத்துக் கொள்ள என்னிடம் கூறவில்லை. நான் அந்த நோய் குறித்து சிகிச்சை எடுத்துக் கொள்ள கூறினேன். அதற்காகத்தான் நான் ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான்.

3. ராஜிவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு செல்லும்போது என்னுடன் என் பெற்றோர் வந்தனர். எந்த தேதியில் ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் மனுதாரர் என்னை வீட்டிலிருந்து வெளியேற்றிய மறுநாள் சென்றேன். பிரச்சனை நடந்ததாக கூறுவது எந்த தேதியில் என்றால் 2014 ம் வருடம் செப்டம்பர் மாதம். தேதி மட்டும் தெரியவில்லை. அதனால் 2014 ம் வருடம் செப்டம்பர் மாதம் மனுதாரர் வீட்டில் இருந்து சென்றுவிட்டேன் என்றால் சரிதான். மருவத்தூர் காவல் நிலையத்தில் என்னை வீட்டில் இருந்து வெளியேற்றிய இரண்டு வருடங்கள் கழித்து புகார் அளித்தேன். அப்பொழுது என் பெற்றோர் வீட்டில்தான் குடியிருந்து வந்தேன். எனக்கு 4.6.2014 அன்று திருமணம் நடைபெற்றது. மண்டப ஏற்பாடு எல்லாம் மனுதாரர் தான் செய்தார். திருமணமாகி 5 மாத காலத்தில் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எனக்கு அந்த நோய் உள்ளது என்றாலும் அதனால்தான் மனுதாரரிடம் கோபித்துகொண்டு நானாக வெளியேறினேன் என்றால் சரியல்ல. தற்கொலைக்கு முயன்றதாக நான்தான் வதந்தி பரப்பினேன் என்றாலும், மனுதாரர் எவ்வித செயலும் செய்யவிலலை என்றாலும் சரியல்ல. நானாக ராஜிவ்காந்தி மருத்துவமனை சென்று ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர் அந்த மருத்துவனைக்கு என்னுடன் வந்தாரா என்றால் நான் அழைத்தேன் அவர் வரவில்லை.

4. மனுதாரர் மீது பொய்யான புகார் அளித்தேன் என்றாலும், அதனால் எனக்க புகார் ரசீது எண் தரவில்லை என்றாலும் சரியல்ல. இது குறித்து மனுதாரரிடம் சமாதானம் பேசினேன் என்றால் சரிதான். மனுதாரரிடம் சமாதானம் பேச நான் செல்லவில்லை. என் பெற்றோர் சென்றனர். மனுதாரர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். நோய் உள்ளது என்று மனுதாரர் என்னை அழைத்து கேட்டார் என்றால் சரியல்ல. சிலாவட்டம் கிராமத்தில் என்று உறவினர் உள்ளனர் என்றால் சரிதான். அங்கும் என் பெற்றோர் போய் சமாதானம் பேசினார்கள். சமாதானம் பேச மனுதாரர் தான் அழைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த

சமாதானத்தில் மனுதாரர் எனக்கு நோய் உள்ளதாக கூறியபோது என் பெற்றோர் மனுதாரரை அடித்தனர் என்றால் சரியல்ல. மதுராந்தகம் காவல் நிலையத்தில் மனுதாரர் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அங்கு சமாதானம் பேசி இருவரும் மனமுவந்து விவாகரத்து பெற்றுக் கொள்ளலாம் என்று பேசப்பட்டது என்றால் சரிதான். அதன்பின்பு மனுதாரர் சேர்ந்து வாழ என்னை அழைத்தார் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் மனுதாரர் எவ்வித வன்கொடுமை செய்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.